# “அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்” [19:1–42]

எல்லாக் காலத்திலும் மாபெரும் அன்பின் வரலாறாக இருப்பது எது? சிலர், சின்ட்ரெல்லா, தூங்கும் அழகி அல்லது பனி வெண்ணழகி பற்றிய தேவதைக் கதையை நினைத்திருக்கலாம். ஒவ்வொரு கதையும், ஒரு அழகு மிக்க, நல்மனம் கொண்ட பணிப்பெண்ணையும் அவளைக் காப்பாற்றிய அழகு மிக்க, உயர்குடி இளவரசனையும் சித்தரித்து, அவர்கள் “அதன் பிறகு எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருந்தார்கள்” என்று முடிக்கின்றது. ஒருவேளை உங்கள் சிந்தையானது அதிகம் இளமைக் காதல் கதையான *ரோமியோ ஜூலியட்* அல்லது *காற்றுடன் போனது* போன்றவற்றை நோக்கிச் செல்லலாம்.

அன்பின் கதைகள் பற்றி நீங்கள் நினைக்கும் பொழுது, குழந்தையின் மீது பெற்றோரின் அன்பை நீங்கள் நினைக்கின்றீர்கள். கடினமானதொரு குளிர்காலப் பனிப்புயலில் சிக்கிக் கொண்ட குடியானவத் தாய் மற்றும் அவளுக்குப் பிறந்திருந்த பச்சிளம் குழந்தை ஆகியோரைப் பற்றிய கதை கொரியாவில் இருந்து வருகின்றது. தனது சிறு குழந்தையைக் காப்பாற்ற நம்பிக்கையிழந்த வகையில் முயற்சி செய்த அந்தத் தாய் தனது கனத்த துணிகளை எடுத்து தனது குழந்தையை அவைகளால் சுற்றிப் பொதிந்தாள். அடுத்த நாள் காலையில், உறைந்த போயிருந்த அவளுடைய உடல் கண்டு பிடிக்கப்பட்டது, அவளுக்கு அருகில் இருந்த துணிப் பொதியிலிருந்து பாதுகாப்புடனும், கதகதப்புடனும் இருந்த அவளது மகனின் அழுகுரல் கேட்டது. அவன் வளருகையில், அவனது தாயின் அன்பு மற்றும் தியாகம் பற்றி அடிக்கடி அவனுக்குக் கூறப்பட்டது. குளிர்காலத்தில் ஒருநாள், அவன் தனது தாயின் கல்லறையருகில் தன் மேல் கோட்டு அல்லது சட்டை எதுவுமின்றி அவன் காணப்பட்டான். மீண்டும் மீண்டும் அவன், “அம்மா, நீங்கள் எனக்காக அனுபவித்த குளிர் இப்படியிருந்ததா?” என்று கேட்டுக் கொண்டே இருந்தான்.

இது போன்ற கதைகள், அன்பின் மாபெரும் செயல்விளக்கங்கள் என்ற வகையில் நமது இருதயங்களைத் தொடுகின்றன. இருப்பினும், எல்லாக் காலத்திலும் மாபெரும் அன்பின் வரலாறு என்பது நிச்சயமாக யோவான் 19ல் இருந்துதான் வர வேண்டும். இது நமது தேவன் நம்மை எவ்வளவாக அன்புகூருகின்றார் என்பதைப் பற்றிய வரலாறு ஆகும்; இது சிலுவையின் வரலாறாக உள்ளது.

## அன்பின் வரலாறு என்ற வகையில் சிலுவை

அன்பின் வரலாறு என்ற வகையில் சிலுவையைப் பற்றிப் பேசுவது என்பதில் புதுமை எதுவும் இருப்பதில்லை. சிலுவை என்பது தேவனுடைய அன்பின் நிறைவான செயல்விளக்கமாயிருந்ததென்று யோவான் பலமுறை சுட்டிக்காட்டியிருந்தார்:

> தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (3:16).
>
> பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார் (13:1).
>
> நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை (15:12, 13).

சிலுவையைக் குறித்துப் பல விளக்கங்கள் தரப்படலாம். சிலுவை என்பது தேவனுடைய அன்பின் நிறைவான செயல்விளக்கமாக இருந்தது என்பது யோவான் சுவிசேஷத்தில் வலியுறுத்தப்படும் விளக்கமாக உள்ளது.

அன்னா, காய்பா மற்றும் பிலாத்து ஆகியோரிடம் விசாரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிலுவையிலறையப்படும்படி இயேசு யூதர்களிடம் ஒப்புவிக்கப்பட்டார். சிலுவை என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் மூலைக் கல்லாக இருந்தாலும், அவ்வுண்மை நிகழ்ச்சியானது ஒரு சில வார்த்தைகளில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது.

> அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்து கொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப் போனார். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடே கூட வேறிரண்டு பேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள் (19:17, 18).

உண்மையில், சுவிசேஷ எழுத்தாளர்கள் நான்கு பேரில், எவரும் இயேசு சிலுவையில் அறையப்படுதல் பற்றிய இயல்பான விபரங்கள் பலவற்றைத் தரவில்லை. "அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்" என்பவை மிகப் பேரளவான அர்த்தம் சுமந்த எளிய வார்த்தைகளாக உள்ளன. இயேசு தேவனுடைய குமாரனாக உள்ளார் என்று விசுவாசிக்கின்ற (இதோ, அந்த வார்த்தை மீண்டும் வருகின்றது!) ஒருவர், ஆழமான உணர்வுக்கு

ஆட்படாமல் இவ்வார்த்தைகளை வாசிக்க முடியாது. ''அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்'' என்ற யோவானின் கூற்றினுடைய வல்லமை அவ்வளவு பெரிதாய் இருக்கின்றது.

அடுத்ததாக யோவான், இயேசுவின் தலைக்கு மேலாக ஒரு மேல் விலாசம் போடும்படி பிலாத்து ஆணையிட்டது எவ்விதம் என்று கூறினார். அதில், ''நசரேயனாகிய இயேசு யூதருடைய இராஜா'' என்று எழுதப் பட்டிருந்தது (19:19). திகைப்பூட்டும் இக்கூற்றானது எபிரெயு (யூதர்களின் மொழி), இலத்தீன் (ரோமர்களின் மொழி), மற்றும் கிரேக்கு (அந்த நாளில் பொதுவான வர்த்தக மொழி) ஆகியவற்றில் எழுதப்பட்டிருந்தது. இது, இயேசுவின் மரணத்திற்குக் காரணமாயிருந்த பிரதான ஆசாரியர்களுக்குப் பயங்கரமாகக் குற்ற உணர்வூட்டுவதாயிருந்தது. அந்த மேல் விலாசத்தில், "இம்மனிதன் தன்னை யூதருடைய இராஜா என்று கூறிக் கொள்கிறான்" என்று எழுதப்பட்டிருக்கும்படி அவர்கள் விரும்பினார்கள். பிலாத்துவோ, பண்புக்குட்படாத பலத்தினாலோ அல்லது குற்ற உணர்வூட்டும் பண்பினாலோ, "நான் எழுதினது எழுதினதே" (19:22) என்று கூறினார்.

சிலுவையின் மீது பதிக்கப்பட்ட மேல் விலாசமானது யோவான் சுவிசேஷத்தில் ஒருவர் தாம் அறிந்திருந்தவைகளுக்கும் அதிகமானதைக் கூறியதற்கான இன்னொரு எடுத்துக்காட்டாக உள்ளது. முன்பு நாம் இதனை, யூத ஆலோசனைச் சங்கத்தாரிடம் காய்பா, "உங்களுக்கு ஒன்றுந் தெரியாது; ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள்" (11:49, 50) என்று கூறியிருந்ததில் காண்கின்றோம். அதைத் தொடர்ந்து யோவான் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்:

> இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூத ஜனங்களுக்காக மரிக்கப் போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப் போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான் (11:51, 52).

இதே வகையிலேயே, பிலாத்து சிலுவையில் இயேசுவின் தலைக்கு மேல் வைக்கும்படியான மேல் விலாசத்திற்குக் கட்டளையிட்ட பொழுது அவர் உணர்ந்தறிந்திருந்ததை விட அதிக ஆழமான சத்தியம் ஒன்றை பேசினார்.

இயேசுவைச் சிலுவையில் அறையும்படி கட்டளை பெற்ற வீரர்கள் பயங்கரமானதாயிருந்தாலும், சலிப்பூட்டக் கூடியதாகவும் இருந்த பணியை நிகழ்த்த வேண்டியிருந்தது. ஒரு நபரைச் சிலுவையில் அறைந்து, அந்தச் சிலுவையை உயர்த்திய பிறகு, அந்நபர் இறந்து போவதற்காகக் காத்திருப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கு இல்லாதிருந்தது. நேரத்தைக் கழிப்பதற்காகவும், சற்றுக் கூடுதலாய்ப் பணம் ஈட்டுவதற் காகவும், அவர்கள் சிலுவையில் அறைந்த நபருடைய உடைகளைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டார்கள். இயேசுவின் உடைகளை அவர்கள் நான்கு பங்குகளாகத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர், மற்றும் அவர்

அணிந்திருந்த தையல் இல்லாத அங்கி யாருக்குக் கிடைக்கும் என்பதற்காக அதைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள்.

சிலுவையில் அறைதல் என்பது தண்டனை நிறைவேற்றத்தின் வழி முறையாக மட்டும் இருந்ததில்லை; அது முற்றிலும் சிறுமைப்படுத்தி வெட்கக் கேட்டிற்குள்ளாக்கும் வழிமுறையாகவும் இருந்தது. அது பெரும்பாலும் ஒரு பொதுவான இடத்தில், அந்த அவமானமான காட்சியை அவ்வழியே கடந்து செல்வோர் யாவரும் காணும் வகையில்தான் எப்பொழுதும் நடத்தப்பட்டது. இவ்விதமாய் இறக்கும் நபரையும் அவன் பிரதிநிதித்துவப்படுத்தும் காரணம் அல்லது குற்றத்தையும் சிறுமைப் படுத்துதல் என்பதே இதைச் செய்த ரோமர்களின் நோக்கமாய் இருந்தது. ரோமக் குடிமகன்களை அவர்கள் சிலுவையில் அறைந்ததில்லை; இவ்வகையான தண்டனையானது அடிமைகள், அயல் நாட்டினர், மற்றும் கீழ்த்தட்டு வர்க்க மக்கள் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டதாயிருந்தது. அவர்கள் பெரும்பாலும் நிர்வாணமாகச் சிலுவையில் அறையப்பட்டனர், அவர்களின் உடல்கள் அழுகிப் போகும்படி வாரக் கணக்கில் சிலுவைகளி லேயே விடப்பட்டு, இவ்விதமாக அக்காட்சியானது மிகவும் வெறுப்பும் அருவருப்பும் தரும் வகையில் இருக்கும். போர் வீரர்கள் இயேசுவின் உடைகளைப் பங்கிட்டுக் கொண்டனர் என்று யோவான் பதிவு செய்த பொழுது, சிலுவையினால் நோக்கப்படுத்தப்பட்ட அவமானம் நிறைந்த ஒரு சிறுமைப்படுத்துதலை - நம் எல்லாருக்காகவும் இயேசு சுமந்த சிறுமைப் படுத்துதலை - நமக்கு அவர் நினைவூட்டினார்!

யோவானின் குறிப்பு அடுத்தபடியாக, சிலுவையின் அடியில் நின்று கொண்டிருந்த பெண்களின் பக்கம் திரும்புகின்றது. இயேசுவின் தாயான மரியாளும் அவர்களில் ஒருவராய் இருந்தார். இப்படிப்பட்ட மரணத்தை அடையும் தனது மகனைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு தாயின் இருதயத்தில் உள்ள வேதனையைக் கற்பனை செய்து பார்ப்பது கூடக் கடினமானதாக உள்ளது. இருப்பினும் இயேசு தமது பாடுகளிலும் கூடத் தம்முடைய தாயின் தேவைகளைக் கவனித்து அவற்றிற்கு ஊழியம் செய்யக் கூடியவராய் இருந்தார். இயேசுவின் இளமைப் பருவத்திலேயே யோசேப்பு இறந்திருந்தார் என்பதால், இயேசு தாம் மரித்த பிறகு மரியாள் தன்னைத் தானே கவனித்துக் கொள்வதில் சிரமப்படுவார்கள் என்பதை அறிந்தார். இயேசு சிலுவையில் இருந்து கீழ் நோக்கிக் காண்கையில், ''தமக்கு அன்பாயிருந்த சீஷனை'' (அநேகமாக யோவானை) அங்கு கண்டு, தம்முடைய தாயிடத்தில் "ஸ்திரீயே, அதோ, உன் மகன்" (19:26) என்றார். பிறகு அவர் யோவானிடத்தில், "அதோ, உன் தாய்" (19:27) என்றார். அவ்விருவரும், அவர் எதனை அர்த்தப்படுத்தினார் என்று அறிந்தனர்; மரியாளை யோவான் தன் சொந்தத் தாய் போல் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்பில் இருந்தார், மற்றும் அந்நாளில் இருந்து மரியாள் யோவானு டைய வீட்டில் வசிக்கும்படி சென்றார்.

மரியாள் மற்றும் யோவானிடம் இயேசுவின் வார்த்தைகளே கூட இயேசுவின் அன்பினுடைய வல்லமையையும் தூய்மையையும் சுட்டிக் காட்டுகின்றன. துன்புறுதல் என்பது நம்மை சுயமையமுள்ளவர்களாக்கிக்

கொள்ளும்படியாகச் சாய்க்கின்றது. நாம் வேதனையை உணருகின்ற பொழுது, எவரொருவரையும் அல்லது வேறு எதைப் பற்றியும் நினைப்பது என்பது கடினமானதாக உள்ளது. இந்த உண்மையானது இயேசு சிலுவையில் மரித்த வேளையில் தம்முடைய தாயின் தேவைகளைக் குறித்து நினைத்துச் செயல்பட்டதை மிகவும் குறிப்பிடத் தக்கதாக்குகின்றது.

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, சிலுவையின் வரலாறு மிக விரைவாக ஒரு முடிவுக்கு வந்தது. இயேசு தம்முடைய பணிப் பொறுப்பை முடித்திருந்ததை அறிந்தார். பிறகு அவர், "தாகமாயிருக்கிறேன்" (19:28) என்று உரைத்தார், மற்றும் சிலர் அவருக்குக் கடற்காளானில் தோய்க்கப் பட்ட காடியைக் கொடுத்தார்கள். இந்த சுவிசேஷத்தில் நாம் அடிக்கடி கண்டுள்ளபடி, மீண்டும் ஒருமுறை இயேசுவின் மனிதத்துவம் வலியுறுத்தப் படுகின்றது. பசியாகவும் களைப்பாகவும் இருத்தல் (4:6) மற்றும் ஆவியில் ஆழமான கவலையுற்றிருத்தல் (11:33) என்பது எப்படியிருந்தது என்று அவர் அறிந்திருந்தார். இயேசு நமது மனிதத்துவத்தை முற்றிலும் புரிந்துள்ளார், மற்றும் அதை அவர் மரிப்பதற்குச் சற்று முன் "தாகமாயிருக்கிறேன்" என்று கூறிய பொழுது விவரித்தார்.

பிறகு இயேசு சிலுவையிலிருந்து தம்முடைய கடைசி வார்த்தையை உரைத்தார்: "முடிந்தது!" (19:30). அத்துடன் "அவர் தலை சாய்த்துத் தம் ஆவியை ஒப்புக் கொடுத்தார்." அவர் தம் வாழ்க்கைக்கான ஒரு திட்டத் தைப் பின்பற்றினார், மற்றும் கடைசியில் அவர் அதனை நிறைவேற்றினார். அவரது மரணம் தற்செயலானதல்ல மற்றும் எவரொருவரும் அவருடைய ஆவியை அவரிடமிருந்து பறிக்கவில்லை. அவர் நமது பாவமன்னிப்புக்காகத் தேவனுடைய திட்டப்படி தம்முடைய ஜீவனைக் கையளித்தார்!

## முடிவெடுக்க ஒரு அழைப்பாகச் சிலுவை

சிலுவையில் இயேசுவின் மரணம் பற்றிய வரலாறு குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்? அதைக் குறித்து நாம் மோசமாக உணர வேண்டுமா? நாம் அகம் மகிழ வேண்டுமா? நாம் வேறு ஏதேனும் செய்வது அவசியமா?

யோவான் சுவிசேஷம் முழுவதிலும் மக்கள் அவ்வரலாறுகளைக் கவனித்து, கேள்விப்பட்டு மற்றும் இயேசுவுடன் உரையாடியது போலவே நாமும் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கின்றோம். இவைகள் அவர்களின் வரலாறுகளாக மட்டும் இருக்கும்படி நோக்கம் கொண்டவையல்ல; அவைகள் நமது வரலாறுகளாகவும் இருக்கின்றன. இந்த சுவிசேஷமானது இயேசுவில் *அவர்கள்* கொண்ட விசுவாசத்தைப் பற்றியது மட்டும் அல்ல; இது நமது விசுவாசத்தைப் பற்றியதுமாக உள்ளது. யோவான் இதை, இயேசுவின் மரணம் பற்றிய தமது விபரத்தைத் தொடர்ந்து நமக்கு நினைவூட்டினார்: "அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனு டைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்" (19:35). மீண்டும் நாம் "விசுவாசம்" பற்றிய கேள்வியைக் காண்கின்றோம். நெருக்கம் வரும்போது நிலைநிற்க முடியாதிருந்தவர்கள் என்ற வகையில் பேதுரு

மற்றும் பிலாத்து ஆகியோரின் எடுத்துக்காட்டுகளைப் பற்றிய விபரங்களை யோவான் நமக்குத் தந்தார். இதற்கு நேர் மாறான வகையில், இயேசுவின் மரணத்தைத் தொடர்ந்து அவர் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடத் தைரியம் கொண்டிருந்தவர்களின் இரு எடுத்துக்காட்டு களையும் அளித்தார்.

அரிமத்தியா ஊர் யோசேப்பு என்பவர் இயேசுவின் சீஷராயிருந்தார், ஆனால் அவர் யூதத் தலைவர்களுக்குப் பயந்ததினால் இரகசிய சீஷராய் இருந்தார். இயேசு இறந்த பொழுது, அவருடைய சரீரத்தைப் புதைக்கும்படி எடுத்துக் கொள்ள பிலாத்துவிடம் சென்று அவர் அனுமதி கேட்டார். இது இயேசுவைப் பின்பற்றுபவர் என்று அடையாளப்படுத்திக் கொள்வதில் பயமடைந்த ஒருவரின் "இரகசியமான" செயலல்ல என்பது உறுதி![1]

இயேசுவின் உடலைப் புதைத்தல் என்ற பயமற்ற செயலில் யோசேப்பின் கூட்டாளியாக இருந்தவர் நிக்கொதேமு என்பவரைத் தவிர வேறு எவரும் இல்லை, இவர் (நிக்கொதேமு) "ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்தவர்" (19:39) ஆவார். இவரை நாம் அதிகாரம் 3ல் புதுப்பிறப்பைப் பற்றி இயேசு இவரிடம் கூறிய வேளையில் கண்டோம். மீண்டும் நாம் இவரை 7:50-52ல் தமது விசுவாசம் பற்றி அப்பொழுதும் "வெளிப்படையாய்" இல்லாத பொழுது கண்டோம். இருப்பினும், இந்த வேளையில், மனித வரலாற்றிலேயே இருள் மிக்க வேளையில், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட வேளையில் நாம் இவரைக் காண்கின்றோம். இங்கே, ஒரு தைரியமான, நிச்சயமான மற்றும் துணிவான விசுவாசத்தை அவர் செயல்விளக்கப்படுத்தினார். யோசேப்பும், நிக்கொதேமுவும் ஒன்றுகூடி இயேசுவின் உடலை அடக்கம் செய்யத் தயாரித்து, அதைக் கல்லறையில் வைத்தனர்.

## முடிவுரை

செயலற்ற பொழுதுபோக்கை அளிப்பதற்காக இயேசுவின் வரலாறு கூறப்படுவதில்லை. இது, இதனைக் கேட்பவர்களின் இருதயங்களில் வாழ்கின்ற, வாழ்வை மாற்றுகின்ற விசுவாசத்தை உண்டாக்குவதற்காகவே கூறப்படுகின்றது. சிலுவை என்பது நாம் கேட்டு பிறகு மறந்து விடக் கூடியது அல்ல. இதற்கு ஒரு பதில்செயல் தேவைப்படுகின்றது. யோவானுடைய கேள்வி தப்பித்துக்கொள்ள முடியாததாக உள்ளது; நீங்கள் விசுவாசத் தினுள் அடியெடுத்து வைத்து, உங்களுக்காக இறந்தவருடன் உங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களாய் இருப்பீர்களா? இயேசு உங்களுக்காக மரித்தார். அதைக் குறித்து நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்?

குறிப்பு

[1]யோசேப்பு என்பவர் செல்வந்தராய், யூத ஆலோசனை சங்கத்தின் அங்கத்தினராயிருந்து, ‘‘மிகவும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு’’ பிலாத்துவினிடத்தில் துணிந்து போய் இயேசுவின் உடலைக் கேட்டதாக மாற். 15:43 சுட்டிக்காட்டுகின்றது.

## யூதர்களின் வருடாந்தரப் பண்டிகைகள்

தோராயமான ரோம மாதங்கள்

| ஜன. | பெப்/மார்ச். | ஏப்ரல் | மே/ஜூன் | ஜூலை | ஆக. | செப்./அக். | நவ. | டிச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *(1)* பூரிம் பண்டிகை [*2 நாட்கள்*] | *(2)* பஸ்கா [*1 நாள்*] மற்றும் புளிப்பில்லாத அப்பப் பண்டிகை [*1 வாரம்*] | *(3)* பெந்தெகொஸ்தே (அல்லது வாரங்களின் பண்டிகை அல்லது முதற் பலன்களின் பண்டிகை) [*1 நாள்*] | | | *(4)* கூடாரங்களின் (அல்லது உள்கூடுகையின்) பண்டிகை [*1 வாரம்*] *(5)* எக்காளங்களின் பண்டிகை [*1 நாள்*] | | *(6)* அர்ப்பணிப்பின் (அல்லது ஒளியின்) பண்டிகை [*8 நாட்கள்*] |

*ஒவ்வொன்றும் எதை நினைவுகூர்ந்தது: (1) எஸ்தர் இராஜாத்தி யூதர்களைக் காப்பாற்றியது; (2) மரணம் கடந்து செல்லுதல் மற்றும் இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து புறப்படுதல்; (3) சீனாய் மலையில் மோசேயிடம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதல்; (4) வனாந்தர வாழ்வு; (5) புத்தாண்டு தினம்; (6) புற இனத்தாரிடமிருந்து தேவாலயத்தை மீண்டும் கைப்பற்றிய பிறகு அதை அர்ப்பணித்தல்.*

*இவைகளில் மூன்று பண்டிகைகள் - பஸ்கா, கூடாரப் பண்டிகை மற்றும் அர்ப்பணிப்பின் பண்டிகை ஆகியவை - யோவான் சுவிசேஷத்தில் காணப்படுகின்றன.*